**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 105/2017.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ். | ஜாதி | |
| தந்தை பெயர் | இளங்கோவன். | தொழில் ஆட்டோ ஓட்டுநர். | |
| கிராமம் | அன்னஞ்சி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 33/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.02.2026.

**(1–வது எதிரி ஆஜர். 1–வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, அன்னஞ்சியில் குடியிருந்துகொண்டு, ஆட்டோ ஓட்டி தொழில் வருகிறேன். கடந்த 01.09.2016 – ஆம் தேதியன்று, அல்லிநகரம் காவல் நிலையப் போலீசார் என்னையும், அருண்பாண்டி என்பவரையும் பொருட்கள் மற்றும் கார்கள் தொலைந்து போனது சம்பந்தமாக அழைத்துச் சென்றார்கள். அதன்பின்னர், முனீஸ்வரன் என்ற நபரை விசாரித்து, அவரிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நானும், அருண்பாண்டி என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் எதிரி முனீஸ்வரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் என்னை விசாரித்தபோது, என்னுடைய ஆட்டோவின் பதிவெண்ணைக் குறிப்பிட்டு நான் எதுவும் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஆட்டோ எனது பெயரில் உள்ளது என்பதற்கு நான் எவ்வித ஆதாரங்களையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல், என்னுடைய ஓட்டுநர் உரிமத்தையும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக, அன்னஞ்சி விலக்கிற்கு இரவு நேரத்தில் யாரும் வரமாட்டார்கள் என்றால் சரிதான். என்னை அழைக்கும்போது, 5 போலீசார்கள் வந்தார்கள் என்றால் சரியல்ல, 2 போலீசார்கள்தான் வந்தார்கள். மேற்படி 2 போலீசார்களின் பெயர்கள் தெரியுமா? என்றால், எனக்குத் தெரியாது. போலீசார் விசாரணையில் நானும், போலீசாரும் எந்த வாகனத்தில் பெரியகுளத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் எனக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆட்டோ ஸ்டாண்டிற்கு வரும்போது, எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினேன் என்றால், காலை 08.00 மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினேன். எத்தனை மணிக்கு வீட்டிற்குச் சென்றேன் என்றால் இரவு 12.00 மணிக்கு வீட்டிற்குச் சென்றேன். போலீசார் என்னை எழுத்து மூலமாக கடிதம் எழுதிக் கொடுத்து அழைத்தார்களா? என்றால், இல்லை. போலீசார் விசாரணையில், பெரியகுளத்தில் எந்தெந்த பகுதிகளுக்குச் சென்றோம் என்று குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 01.09.2016 ஆம் தேதி போலீசார் என்னை பெரியகுளம் அழைத்துச் செல்லவில்லை என்றாலும், அவ்வாறு என்னை அழைத்துச் சென்றிருந்தால், நான், என்னை அழைத்துச் சென்ற போலீசார்களின் பெயர்களைக் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி வாக்குமூலம் கொடுத்ததாகச்

சொல்லும் சமயத்தில், அந்தப் பகுதியில் வெளிச்சம் இல்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையின்போது, எதிரி என்னென்ன குடும்ப விவரங்களைப் பற்றிக் கூறினார் என்றால்? அவர் மதுரையில் இருப்பதாகச் சொன்னார், அவரின் அப்பாவின் பெயர் சொன்னார், ஆனால் தற்போது, அது எனக்கு ஞாபகமில்லை. என் முன்னிலையில் எதிரி எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாகச் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றேன் என்றால், நான் காவல் நிலையம் செல்லவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.04 16:53:14 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**